# வாழை விலையில் ஏற்றம் இருக்கும்

தமிழகத்தில் வாழை சாகுபடி 2015-16-ம் ஆண்டில் 1.13 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 49.0 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் பொதுவாக தேனி, திருச்சி, ஈரோடு, தூத்துக்குடி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி, தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் அதிக அளவு வாழை பயிரிடப்படுகிறது. திருச்சி, திருநெல்வேலி, கடலூர் தேனி மற்றும் கோயம்புத்தூர் ஆகியவை வாழை விற்பனை செய்யும் முக்கிய சந்தைகளாகும்.

தமிழகத்தில் வாழை உற்பத்தியை பொறுத்த மட்டில், ஒரு மாறுபட்ட சூழ்நிலை நிலவி வருகிறது. தமிழகத்தின் மத்தியில் உள்ள திருச்சி மற்றும் கரூர் சுற்று வட்டார பகுதிகளில் வாழை உற்பத்திக்கு கடந்தாண்டு நன்றாக மழை பெய்ததால் நல்ல மகசூல் கிடைத்துள்ளது. வாழை உற்பத்தி செய்யும் கடலூர் மற்றும விழுப்புரம் ஆகிய வட மாவட்டங்களில் நடப்பு ஆண்டில் ஜூன் மாத இறுதியில் அதிக காற்றுடன் கூடிய மழையின் காரணமாக உற்பத்தி குறைந்துள்ளது. தென் மாவட்டங்களான தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பருவநிலை மற்றும் தண்ணீர் பற்றாகுறையினாலும் வாழை உற்பத்தி குறைந்துள்ளது.

பண்டிகை, திருவிழா மற்றும் திருமண காலங்கள் தொடர்ந்து வருவதால் வரும் மாதங்களில் வாழையின் தேவை தமிழகம் மற்றும் பிற மாநிலங்களில் அதிகரிக்கும் என்பதால் விலை உயர வாய்ப்புள்ளது என எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கடந்த 15 ஆண்டுகளாக நிலவிய பூவன் மற்றும் கற்பூரவள்ளி வாழை ரகங்களின் விலை நிலவரங்களையும் 8 ஆண்டுகள் நிலவிய நேந்திரன் வாழை நிலவரத்தையும் ஆய்வு செய்தது அதன் படி ஆகஸ்ட்-அக்டோபர் மாதங்களில் பூவன் மற்றும் கற்பூரவள்ளி வாழையின் சராசரி பண்ணை விலை கிலோவிற்கு விலை ரூ. 23-25 மற்றும் 27-29 வரை இருக்கும். நேந்திரன் வாழையின் பண்ணை விலை கிலோவிற்கு ரூ. 36-38 வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி - 0422-2431405


**<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>**


பேராசிரியர் மற்றும் தலைவர்
பழப்பயிர்கள் துறை
தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-6611269